# Kanchipuram District

## இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2024
## பதினொன்றாம் வகுப்பு
## விலங்கியல்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்:70

### பகுதி – I

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15x1=15

1. கீழ்க்கண்டவற்றுள் எது சமதர்மத்தில் இல்லை.
அ) பிரைமேட்டா ஆ) ஆர்த்தோப்டீரா இ) டிப்டீரா ஈ) இன்செக்டா

2. ஒட்டி சுருக்குத்தசை எதனை பாதுகாக்கிறது?
அ) கணைய நாளம் ஆ) சிஸ்டிக் நாளம்
இ) கல்லீரல் – கணைய நாளம் ஈ) பொதுப்பித்த நாளம்

3. எதில் திறந்த வகை சுற்றோட்ட மண்டலம் காணப்படுவதில்லை
அ) தவளை ஆ) மண்புழு இ) புறா ஈ) கரப்பான் பூச்சி

4. ஆக்ஸிஜனேற்ற வகை தசையிழைகள் ________ எனவும் அழைக்கப்படுகின்றன.
அ) சிவப்பு தசையிழைகள் ஆ) கொழுப்பு தசையிழைகள்
இ) வெண்மை நிறத் தசையிழைகள் ஈ) மஞ்சள் தசையிழைகள்

5. பட்டுக்கூட்டினுள் இருக்கும் புழுவினைக் கொல்லும் செயல்பாடுகளுக்கு ________ என்று பெயர்.
அ) ரீலிங் ஆ) நூற்றல் இ) வளர்த்தல் ஈ) ஸ்டிஃப்ளிங்

6. பிறந்த குழந்தைகளில் உடல் நடுக்கம் ஏற்படுத்தாமல் வெப்ப உற்பத்தி செய்து உடல் வெப்பம் அதிகரிப்பது எதன் மூலம்?
அ) வெள்ளைக் கொழுப்பு ஆ) பழுப்பு கொழுப்பு
இ) மஞ்சள் கொழுப்பு ஈ) நிறமற்ற கொழுப்பு

7. தவறான இணையை தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) உமிழ் நீர் – டயலின் ஆ) உணவுப்பாதை – கோழைப்படலம்
இ) இரைப்பை – பெப்சின் ஈ) சிறுகுடல் – குளுக்கோகைனேஸ்

8. கீழ்கண்டவற்றுள் எதன் புறப்பரப்பில் இது இருப்பது அல்லது இல்லாமையால் இரத்த வகைகள் உருவாகிறது.
அ) வெள்ளை அணுக்களின் புறப்பரப்பில் ஆன்டிஜென் இருப்பது அல்லது உள்ளதால்
ஆ) சிவப்பணுக்களின் புறப்பரப்பில் ஆன்டிபாடி இருப்பது
இ) சிவப்பணுக்களின் புறப்பரப்பில் ஆன்டிஜென் இருப்பது
ஈ) வெள்ளை அணுக்களின் புறப்பரப்பில் ஆன்டிஜென் இருப்பது

9. சேய்மை சுருள் நுண்குழல் மற்றும் சேகரிப்பு நாளங்களில் ஆல்டோஸ்டீரான் செயல்படும் போது நீர் இதன் மூலம் உறிஞ்சப்படுகிறது
அ) அக்குவாபோரின்கள் ஆ) ஸ்பெக்ட்ரின்
இ) குளுக்கோஸ் கடத்திகள் ஈ) குளோரைடு கால்வாய்

10. தசைச் சுருக்கத்திற்கான ATPயேஸ் நொதி உள்ள இடம்
அ) ஆக்டினின் ஆ) ட்ரோப்போனின் இ) மையோசின் ஈ) ஆக்டின்

11. கீழ்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாண இணை?
அ) அயல்நாட்டு இனம் – சிப்ரினஸ் கார்ப்பியோ ஆ) ஏப்பிக்கல்சர் – ரீலிங்
இ) பட்டுப்புழு வளர்ப்பு – புரோபோலிஸ் ஈ) கறவை இனம் – மால்வி

12. ஒவ்வொரு எலும்புத்தசையும் இதனால் மூடப்பட்டுள்ளது
அ) எப்பிமைசியம் ஆ) பெரிமைசியம் இ) எண்டோமைசியம் ஈ) ஹைப்போமைசியம்

13. கீழ்க்கண்ட எந்த நோய் தைராக்ஸின் அல்லது அயோடின் பற்றாக்குறை நோயல்ல.
அ) ஸ்போரோடிக் காய்ட்டர் ஆ) எக்ஸாப்தால்மிக் காய்ட்டர்
இ) முன் கழுத்துக் கழலை ஈ) மிக்ஸிடிமா

14. நுரையீரல்களுக்குள் 1500 மி.லி காற்று இருக்கும் நிலை
அ) உயிர்புத்திறன் ஆ) மூச்சுக்காற்று அளவு
இ) எஞ்சிய கொள்ளளவு ஈ) உள்மூச்சு சேமிப்புக் கொள்ளளவு

www.Padasalai.Net www.TrbTnpsc.com



15. முத்து சிற்பி சார்ந்த வகை
அ) கேஸ்ட்ரோபோடா ஆ) செபலோபோடா இ) ஸ்கேபபோடா ஈ) பெலிசிபோடா

பகுதி – II

II எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24–க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6x2=12

16. யானைகளும் வன விலங்குகளும் மனித வாழ்விடத்தில் நுழைய காரணம் என்ன?
17. சில வகை எபிதீலியங்கள் பொய்யடுக்கினால் ஆனவை. இதன் பொருள் என்ன?
18. இரத்தச் சிவப்பணு மற்றும் வெள்ளை அணுக்களை நீர்க்கச் செய்யும் திரவங்களின் பெயர்களை எழுதுக.
19. உமிழ் நீரில் உள்ள பை கார்பனேட்டின் பணி யாது?
20. காற்றானது நாசியிலிருந்து மூச்சுக்குழாயை அடையப் பல உறுப்புகளைக் கடந்து செல்கிறது. அவ்வுறுப்புகளின் பெயர்களை வரிசைப்படுத்துக?
21. ஒரு நபரின் மூச்சும் இதயத் துடிப்பும் மின்சார பாய்ச்சலினால், திடீரென நின்று விட்டால், அந்த நெருக்கடி நேரத்தில் எப்படி அந்த நபரைக் காப்பாற்றுவாய்?
22. சிறுநீரகப் பணிகளை நெறிப்படுத்தும் மூன்று ஹார்மோன்கள் யாவை?
23. பட்டுச்சாலை என்று அழைக்கப்படும் பகுதி எது?
24. மாக்குலா லூட்டியா என்றால் என்ன?

பகுதி – III

III எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 33–க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6x3=18

25. மெகா நெஃப்ரீடியத்தின் படம் வரைந்து பாகங்களை குறிக்கவும்.
26. உடல் உயரம் 173 செ.மீ மற்றும் உடல் எடை 79 கி.கி. உடைய ஒரு நபரின் உடல் எடை குறியீட்டை கணக்கிடுக.
27. ஸ்பிக்மோமானோமீட்டரின் மருத்துவ முக்கியத்துவத்தை எழுதுக.
28. மூச்சுக்குழாயில் காற்று செல்லும் வழியில் எதிர்ப்புத் திறன் மிகவும் குறைவு. ஏன்? ஏதேனும் இரண்டு காரணங்களைக் கூறுக.
29. புரோட்டோ நெஃப்ரீடியாக்களை மெட்டா நெஃப்ரீடியாக்களிடமிருந்து வேறுபடுத்துக.
30. எலும்புத் தசை கிளைக்கோஜன் பகுப்பாய்வு (SMGA) என்றால் என்ன?
31. பிளவு உடற்குழியை உணவுப்பாதை உடற்குழியுடன் ஒப்பிடுக?
32. அண்ட உருவாக்கத்தில் ஈஸ்ட்ரோஜன் பங்கைக் குறிப்பிடுக.
33. கூட்டு மீன் வளர்ப்பின் முக்கியத்துவத்தை எழுதுக?

பகுதி – IV

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5x5=25

34. அ) சுவாச மண்டலத்தின் முக்கிய பணிகள் யாவை? (அல்லது)
ஆ) நுகர்ச்சி உணர் உறுப்பின் அமைப்பினை விவரி.
35. அ) நம் இதயத்தில் நான்கு அறைகளும் முழுமையாக பிரிக்கப்பட்டுள்ளன. இதனால் ஆக்ஸிஜன் கொண்ட இரத்தம் ஆக்ஸிஜனற்ற இரத்தத்துடன் கலப்பதில்லை. இதனுடன் தொடர்புடைய இரட்டை சுற்றோட்டத்தை விளக்குக. (அல்லது)
ஆ) 1) இரத்த ஊடுபகுப்பு என்றால் என்ன?
2) இரத்த ஊடுகலப்பு பற்றி விளக்குக.
36. அ) கரப்பான் பூச்சியின் நரம்பு மண்டலத்தை விளக்குக. (அல்லது)
ஆ) ஒருவருக்கு இரத்தம் செலுத்துவதற்கு முன்பு இரத்தம் கொடுப்பவர் மற்றும் பெறுபவரின் ஏற்புடைத் தன்மையை ABO இரத்த வகையில் எவ்வாறு கண்டுபிடிப்பாய். விளக்கவும்.
37. அ) லாங்ஸ்ட்ரோத் தேன் கூட்டின் அமைப்பை படத்துடன் விளக்குக. (அல்லது)
ஆ) கார்டை உறுப்பின் அமைப்பு மற்றும் செயலை விவரிக்கவும்.
38. அ) சமச்சீர் என்றால் என்ன? இதன் பல்வேறு வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது)
ஆ) அட்ரீனல் ஒரு Flight, Fright and fight, ஹார்மோன் என்று ஏன் அழைக்கப்படுகிறது. விளக்கவும்.

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com